ORIGINAL ARTICLE

# கவிஞர் அறிவுமதி கவிதைகளில் உவகை
# [KAVIÑAR AṞIVUMATI KAVITAIKAḶIL UVAKAI]

## HILARITY IN ARIVUMATHI'S POETRY

**சுகுணாதேவி வீரன் / Sugunadevi Veeran *[1]**
**ச.சந்தியா / S.Santhiya [2]**

[1] Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia. Email: suguna1318@gmail.com
[2] N.K.R. Govt Arts College for Women, Namakkal, India. Email: yuvansanthiya13@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/182

**Abstract**

It is knowledge and emotion that haunt human society. From the day the world appeared until the day the world ended, knowledge and emotion existed. According to Thiruvalluvar, knowledge that calms the emotion in his kural. Meyppatu are manifestations of mental consciousness. Tholkkappiyar has numbered the emotions that appear in the human mind in his epic Tholkkappiyam in Chapter Porulathigaaram. He has analyzed the emotions that appear within him in a way that others can know and understand very accurately (Meyppatu). They are eight types of emotions that apply to all human beings in the world. Meyppatu are the expression of human instincts. This dissertation aims to find out how the poetic enlightenment has been manipulated in the poetic epistemology of the numerical facts stated in the economics of Tholkappiam the fact of the matter is that consciousness is an emotional state that paves the way for human happiness. Any living being born into the world wants to be happy. Therefore, the researcher has used the poems of Arivumathi to prove this fact.

**Keywords:** Poetry, Tolkappiyam, Meyppattu, Emotion, Hilarity (Uvakai), Punarvu

**ஆய்வுச் சாரம்**

மனித சமுதாயத்தை ஆட்டிப் படைப்பது அறிவும், உணர்ச்சியும்தான். உலகம் தோன்றிய நாளிலிருந்து, உலகம் அழியும் நாள் வரை இருப்பவை அறிவும் உணர்ச்சியும். உணர்ச்சியை அமைதிப்படுத்துவது அறிவு. மன உணர்வின் வெளிப்பாடுகளே மெய்ப்பாடுகள். தொல்காப்பியர் தனது தொல்காப்பியத்தில் மனிதனின் மனதில் தோன்றும் உணர்வுகளை எண்வகையாக வகுத்துள்ளார். தன் அகத்தில் தோன்றும் உணர்வுகளைப் பிறர் அறிந்து கொள்ளும் வகையிலும் புரிந்து கொள்ளும் வகையிலும் மிகத் துல்லியமாகப் பகுத்துக்காட்டியுள்ளார். அவை உலக மனிதர் அனைவருக்கும் பொருந்தும் உணர்ச்சிகள் ஆகும். மெய்ப்பாடுகள் மனித உள்ளத்து

உணர்ச்சிகளின் வெளிப்பாடு. தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் கூறப்பட்டுள்ள எண்வகை மெய்ப்பாடுகளில் உவகை எனும் மெய்ப்பாட்டுக்கூறு கவிஞர் அறிவுமதி கவிதைகளில் எவ்வகையில் கையாளப்பட்டுள்ளது என்பதைக் கண்டறியும் நோக்கிலேயே இவ்வாய்வுக் கட்டுரை அமைய உள்ளது. உவகை எனும் மெய்ப்பாட்டுக்கூறானது மனித குலம் மகிழ்ச்சியாக வாழ வழி வகுக்கும் ஓர் உணர்வு நிலையாகும். உலகில் பிறந்த எந்த உயிராயினும் மகிழ்ந்திருக்கவே விருப்பம் கொள்கிறது. எனவே ஆய்வாளர், இவ்வுண்மையை நிரூபிக்கும் வண்ணம் அறிவுமதியின் கவிதை படைப்புகளை இவ்வாய்விற்காக பயன்படுத்தியுள்ளார்.

**கருஞ்சொற்கள்:** *கவிதை, தொல்காப்பியம், மெய்ப்பாடு, உணர்ச்சி, உவகை, புணர்வு*

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 20th October 2021, revised 5th November 2021, accepted 15th November 2021

## கவிஞர் அறிவுமதி

கவிஞர் அறிவுமதி புகழ்பெற்ற தமிழ்க் கவிஞரும் பரவலாக அறியப்படும் தமிழ்த் திரப்பட பாடலாசிரியரும் ஆவார். அறிவுமதியின் இயற்பெயர் ‘மதியழகன்’. தனது நண்பர் ‘அறிவழகன்’ பெயரையும் தனது பெயரையும் சேர்த்து ‘அறிவுமதி’ என்று வைத்துக்கொண்டார். அறிவுமதி அவர்கள் மிகுந்த ஆழமான தமிழறிவும் தமிழ்ப்பற்றும் கொண்டவர் ஆவார். அவர் எதனையும் எதார்த்தச் சிந்தனையுடனும் சமுதாயச் சிந்தனையுடனும் அணுகுபவர். சமுதாயத்திற்கு வேண்டிய கருத்துகளைச் சீரிய முறையிலும் மிகவும் எளிய நடையிலும் சொல்லி விடுபவர் (செல்லப்பெருமாள், 2001).[1] இவர் அவிழரும்பு, என் பிரிய வசந்தமே, நிரந்தர மனிதர்கள், அன்பான இராட்சசிக்கு, புல்லின் நுனியில் பனித்துளி, அணுத்திமிர் அடக்கு, ஆயுளின் அந்தி வரை, கடைசி மழைத்துளி, நட்புக்காலம், மணிமுத்த ஆற்றங்கரையில், பாட்டறங்க கவிதைகள், அறிவுமதி கவிதைகள், வலி, எனப் பல கவிதைத் தொகுப்புகளை எழுதியிருக்கிறார். உலக மக்கள் பல இனம், மொழி, கலை, கலாச்சாரம் ஆகியவற்றால் வேறுபட்டிருப்பினும் அவர்கள் அனைவருக்கும் உணர்வுகள் என்ற ஒன்று மிகப் பொருந்திய ஒற்றுமையாகவே அமைந்துள்ளது (ஜொர்கன் டினேஸ் ஜோஹென்சன், 2010)[2]. கவிதை என்பது உரைப்பது கிடையாது; உணர்த்துவது. கவிஞனின் கவிதை படைப்புகள் அனைத்தும் அவனது உள்ளத்து உணர்வுகளின் அடிப்படையிலிருந்துதான் தோன்றுகிறது. கவிதை உலகம் மன நெகிழ்ச்சியை, மன அசைவை அடிப்படையாகக் கொண்டது. கவிதை என்பது தன்னிகரற்றது; படைப்பாளியையும் அப்படைப்பினைப் படிப்பவரையும் மகிழ்விக்கக் கூடியது. கவிஞன் நல்லுள்ளத்தால் தீட்டும் உயிரோவியமே கவிதையாகும் (சந்தியா, 2014)[3]. தொல்காப்பிய பொருளதிகாரத்தில் உள்ள மெய்ப்பாட்டியலில் தற்போதைய அறிஞர்கள் வியக்குமாறு பல செய்திகள் உள்ளன (ஜெயஸ்ரீ, 2010)[4]. தொல்காப்பியத்தில் கூறப்படும் மெய்ப்பாட்டுக் கூறுகளில் ஒன்றான உவகை எவ்வாறு அறிவுமதி கவிதைகளில் வெளிப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிய துணைபுரியும்.

**மெய்ப்பாடு - உவகை**

''மெய்ப்பாடு என்பது பொருட்பாடு; அஃதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றான் வெளிப்படுதல்'' என்பதாகும் என்கிறார் (இலக்குவனார், 2009)[5]. உள்ளக் குறிப்பும் உடலில் தோன்றும் வேறுபாடும் கூடிய வழியே மெய்ப்பாடு தோன்றுகின்றது (இலக்குவனார், 2009)[5].

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை யென்று
அப்பா லெட்டே மெய்ப்பா டென்ப
(பொருளதிகாரம்-மெய்ப்பாட்டியல்)

உவகை என்ற இந்த மெய்ப்பாடானது, செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு எனும் 4 நிலைக்களன்களைக் கொண்டு தோன்றுதல் ஆகும். இம்மெய்ப்பாடு மனம் மகிழ்வுற்ற நிலையில் தோன்றுவது ஆகும். இதன் இயல்பினைச்,

செல்வம் புலனே புணர்வு விளை யாட்டென
அல்லல் நீத்த உவகை நான்கே (தொல்:பொரு:255)

என்ற நூற்பா உணர்த்துகிறது. இவற்றில் செல்வம் என்பது செல்வ நுகர்ச்சியையும், புலன் என்பது புலமையால் ஏற்படும் அறிவு முதிர்ச்சியையும், புணர்வு என்பது காமப்புணர்வையும், விளையாட்டு என்பது ஆறு, குளம், சோலையில் தங்கி விளையாடுதலையும் குறிக்கும்.

உலகியல் வாழ்வில் பிறரது துன்பத்தினைக் கண்டு கீழ் மக்கள் அடையும் போலி மகிழ்ச்சி உண்மையான மகிழ்ச்சியாகாது என அறிவுறுத்தும் நோக்கில், ''அல்லல் நீத்த உவகை'' என்கிறார் தொல்காப்பியர்.

**அறிவுமதி கவிதைகளில் உவகை**

தொல்காப்பியரின் எண்வகை மெய்ப்பாட்டியலில் எட்டாவதாகத் தொல்காப்பியர் சுட்டுவது உவகை ஆகும். உவகை என்பது உள்ளத்தளவில் மகிழ்ச்சியடைவதாகும். உவகை என்பது அன்பு, காமம், புணர்ச்சியால் ஏற்படும் மகிழ்ச்சி எனப் பொருள்படும் (இலக்குவனார், 2009)[5].

இகழ்ந்தெள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்பது உடைத்து (இரவு:1057)

அவமதிக்காமல், இழிவாகப் பேசாமல் எடுத்துக் கொடுப்பவரைக் கண்டால், பிச்சை கேட்பவரின் மனம் மகிழ்ந்து உள்ளுக்குள்ளே உவகை கொள்ளும் என்கிறார் திருவள்ளுவர் (சிங்காரவேலு, 2013)[6].

புணர்வு என்பது காமப்புணர்ச்சி அல்லது உடலுறவு கொள்ளுதல் என்று பொருள்படும்.

ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன் (புணர்ச்சி மகிழ்தல்:1109)

ஊடுதல், ஊடலை உணர்ந்து விடுதல், அதன்பின் கூடுதல் ஆகிய இவை காதல் வாழ்வு நிறைவேறப் பெற்றவர் பெற்ற பயன்களாகும் என்கிறார் திருவள்ளுவர்.

காதல் என்பது இனக்கவர்ச்சியின் அடிப்படையின் கீழ் ஆண் பெண் இருபாலரிடையே பிறக்கும் நேசம் அல்லது அன்பு என்று பொருள்படுவதைக் க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி குறிப்பிட்டுள்ளது. மனித இதயத்தில் காதல் தடுக்கப்பட அல்லது தவிர்க்கப் பட முடியாத

ஒன்றாகிவிடுகின்றது. காதல் என்பது மனிதர்களின் வாழ்க்கையையும் உடம்பையும் ஆட்கொண்டு, அவற்றை ஆட்டிப் படைக்கும் மாபெரும் சக்தியாக அமைகிறது. காதல் உணர்வு இல்லாமல் மனித வாழ்வு இயங்காது எனவும் இவ்வுணர்வானது அனைத்து உயிர்களுக்கும் பொதுவானதே என்பதையும் தொல்காப்பியர் அகமாகவும் புறமாகவும் பிரித்து அன்று தொட்டே வாழ்ந்து வந்த உண்மையை இதன் மூலம் அறிய முடிகின்றது (புலியூர்க் கேசிகன், 2010)[7].

திருவள்ளுவரின் 'காமத்துப்பால்' எனும் களவியலும் கற்பியலும் குடும்ப வாழ்வுக்கு அடித்தளமானக் காதல் வாழ்க்கைக்கு ஒரு வழியைக் காட்டுகின்றது. காதலைப் பற்றிப் பாடாத இலக்கியங்களே இல்லை எனக் கூறலாம். (கவி, 2013)[8]. அதே வரிசையில் காதலைப் பற்றிப் பாடாத கவிஞர்களே இல்லை எனவும் உறுதியாகக் கூறலாம். கவிஞர் அறிவுமதியும் அதற்கு விதிவிலக்கல்ல.

*சிறுகோட்டுப் பெரும்பழம்*
*தூங்கியாங்கு இவள்*
*உயிர் தவச் சிறிது*
*காமமோ பெரிதே - (குறுந்தொகை-18)*

என்ற குறுந்தொகைப் பாடலை அடிப்படையாகக் கொண்டு, கவிஞர் அறிவுமதி அவர்கள் உலகத்தில் உயிர் செழிக்க வாழ்கவென்ற வாழ்த்துதலோடு மழைப்பேச்சு எனும் கவிதை தொகுப்பினைத் தொடங்கியுள்ளார்.

***நிகழ்கையில் சாரல்***
***நினைக்க நினைக்கத்தான் மழை-*** (அறிவுமதி, 2011)[9]

ஆண் பெண் இருபாலருக்கிடையே ஏற்பட்டுகின்ற அந்தப் புணர்வினை நினைத்து நினைத்து மகிழக்க்கூடிய மழையாய் அமைவதாய் கூறுகின்றாய். புணர்வு நிகழுகின்ற தருணத்தில் மட்டுமல்லாது, அதை நினைக்கும் தருணமே மிகவும் நெகிழச் செய்வதாய் குறிப்பிட்டுள்ளார் கவிஞர்.

***அது ஒன்றுமில்லை***
***உன்னைத் திறந்து என்னுள் நுழைவது-*** (அறிவுமதி, 2011)[9]

என மிக இயல்பாய் தனக்கே உரிய பாணியில் கவிஞர் ஆணும் பெண்ணுக்கும் இடையே ஏற்படும் காதல் லீலைகளை மிக எளிய முறையிலும் நவநாகரீகமாகவும் சொல்லி விட்டுச் செல்கின்றார் எனலாம்.

***குழந்தைகளாய் இருங்கள்***
***கேட்டு வாங்கிச் சாப்பிடுவதில்-*** (அறிவுமதி, 2011)[9]

எனும் கவிதை வரிகளில், ஆணுக்கும் பெண்ணுக்குமான உடலுறவின் போது, கேட்டு வாங்கிச் சாப்பிடுவதில், குழந்தையை உவமையாகக் காட்டி, கேட்டுப் பெற்று இன்புறக் கூறுகின்றார்.

***நெற்றிமுடியைச் சரிசெய்வதாகத்தான் தொடங்குகிறது***
***பெரும்பாலும் அது-*** (அறிவுமதி, 2011)[9]

எனும் கவிதை வரிகளில் கவிஞரின் எதார்த்தத்தைக் காண முடிகின்றது. எவ்வளவு இயல்பாக உள்ளத்து உணர்வுகளைப் படம் பிடித்தாற்போல காட்டியுள்ளது இக்கவிதை வரிகள். காமத்தைக் கவிதை மூலம் இலக்கிய கண் கொண்டு சுவைக்க இந்த மழைப்பேச்சு ஒன்றே போதுமானது எனலாம்.

***உள்ளே கனக்கிற நீ மேலே மிதக்கிறாய்-*** (அறிவுமதி, 2011)[9]

இக்கவிதை வரிகள், திருவள்ளுவரின் காமத்துப்பால் அதிகாரத்தில் இடம்பெறும்

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள் – (குறள்:1104)

திருக்குறள் வரிகளுக்கு மிகப் பொருந்தி வருவதைக் காணலாம். நீங்கினால் சுடக்கூடியதும் நெருங்கினால் குளிரக் கூடியதுமான புதுமையான நெருப்பை இந்த மங்கை எங்கிருந்து பெற்றாள் எனும் கேள்விக்குப் பொருத்தமானதாய் உள்ளே கனக்கிற நீ மேலே மிதப்பது எப்படி எனும் தோரணையில் கவிஞரும் கேள்வி எழுப்பியுள்ளார்.

***ஒவ்வோர் அசைவுக்கும்***
***ஒவ்வொரு கோலம் போடுகிறது மெல்லிய சங்கிலி***
- (அறிவுமதி, 2011)[9]

மேற்காணும் கவிதை வரிகளில் உவகை மெய்ப்பாட்டு நிலைக்களன் புணர்வு வெளிப்படுகிறது. ஆணின் ஒவ்வொரு அசைவுக்கும் ஏற்றாற்போல ஏங்கித் தவித்திருக்கும் பெண்ணின் அங்க அசைவுகள் கோலம் போடுவதாய் அமைகிறது என்கிறார் கவிஞர். இஃது ஓயாமல் பெய்ந்து கொண்டிருக்கும் மழைப்பேச்சின் சாரல்கள் ஆகும்.

***மூடிய இமை***
***திறந்த உதட உச்சம்*** – (அறிவுமதி, 2011)[9]

காமத்திற்கு இன்பம் தருவது ஊடுதல் ஆகும். அவ்வூடல் முடிந்த பின் கூடித் தழுவப் பெற்றால் அந்த ஊடலுக்கு இன்பமாகும் என்கிறார் திருவள்ளுவர்.

*ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்*
*கூடி முயங்கப் பெறின்* – (கற்பியல்:1330)

மேற்காணும் கவிதை வரிகளில், காதலர்களின் உடல்களின் உரையாடல்கள் புலப்படுகின்றன. *மூடிய இமை திறந்த உதடு உச்சம்* எனும் கவிதை வரிகளில் உவகை மெய்ப்பாட்டு நிலைக்களன் புணர்ச்சி வெளிப்படுகிறது.

***நெற்றிமுடியைச் சரிசெய்வதாகத்தான்***
***தொடங்குகிறது பெரும்பாலும் அது*** – (அறிவுமதி, 2011)[9]

மேற்காணும் கவிதை வரிகளில், ஆண் பெண்ணுக்குமான உடல் உறவு அல்லது புணரும் நிலை என்பது பெரும்பாலும் ஆணானவன் பெண்ணின் நெற்றி முடியைச் சரி செய்வதாகத்தான் தொடங்குகிறது என்கிறார் கவிஞர். இக்கவிதை வரிகளில் உவகை மெய்ப்பாட்டு நிலைக்களன் புணர்வு வெளிப்படுகிறது.

***இரவைக் கிழித்துப்***
***போர்த்திக்கொள்ளும் உன்***
***வார்த்தைகளை***
***என்னிடம்***
***அனுப்பி வைக்காதே***

***காற்றைக் கிளறி***
***உயிர்நடும் என் சுவாசங்களை***
***நிழல்மூக்கில்***
***எதிர்பார்க்காதே***
***பால்துளி தேடும்***
***என் பசிகளில்***

***நகக்குறிகள்***
***கருதாதே***

***சதை நிர்வாணம் கொண்டு என்***
***ஆத்ம***
***நிர்வாணத்தைக்***
***கேலிப்படம் தீட்டாதே***

***சூரியனை வரைய என்***
***காயங்களில்***
***வண்ணம் தேடாதே*** – (அறிவுமதி, 1978)[10]

மேற்காணும் கவிதை வரிகளில், உவகை மெய்ப்பாட்டு நிலைக்களன் புணர்வு வெளிப்படுகிறது. காதலன் காதலியிடையே தனது புணர்வு சமயத்தில் ஏற்பட்ட சிறு சிறு சீராய்ப்புகளையும் நகக்குறிகளையும் எண்ணித் தன்னைக் கேலிச் செய்ய வேண்டாம் எனக் கூறும் நிலையில் உவகை மெய்ப்பாட்டு நிலைக்களன் புணர்வு வெளிப்படுகிறது.

***இரவுகளுக்காக***
***மட்டுமோ***
***என்னை நீ***
***இரவல்***
***கேட்டது***

***உன்***
***மலையடிவாரங்களில்***
***முயல்வேட்டை***
***ஆட மட்டுமோ***
***அழைத்தாய்***
***என்***
***வேட்டை***
***நாய்களை***
***உன்***
***வயல் வயிற்றின்***
***ரோம***
***வரப்பில்***
***நடந்து***

***தொப்புட்***
***குழியுள்***
***இடறவோ***
***அழைத்தாய்***
***என்***
***உதட்டுப்***
***பாதங்களை***

***என்னை***
***உடுத்திக் கொள்ளவோ***
***நீ***
***ஆடைகள்***
***களைந்தது...*** – (அறிவுமதி, 1978)[10]

மேற்காணும் கவிதை வரிகளில், காதலன் தன் காதலியிடம் இரவில் மட்டுமாய் உனக்குக் காமப் பசி போக்கவோ என்னை அழைத்தாய் என மட்டுமின்றி, காதலியின் அங்கம் முழுதுமாய் தான் புரிந்த காம விளையாட்டுகளையும் குறிப்பிடுவதாய் அமையும் கவிதை வரிகளில் உவகை மெய்ப்பாட்டு நிலைக்களன் புணர்வு வெளிப்படுகிறது.

**முடிவுரை**

கவிஞர் அறிவுமதியின் கவிதை படைப்புகளில் உவகை மெய்ப்பாட்டுக் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்ட உவகை நிலைக்களனான புணர்ச்சி மிகத் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியமான குறுந்தொகையில் தலைவன் தலைவி கூற்று எனப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால், இக்கவிஞரின் கவிதை படைப்புகளில் இரு பாலரையும் வேறுபடுத்திக்காட்ட வண்ணம் மிகவும் அருமையாக சாரலாய் தொடங்கி மழைப்பேச்சாய் முடிந்துள்ளது.

கவிஞரது ஆழமான கருத்துகளை மனதில் நிலைநிறுத்தி மனித நேயத்தை மேலோங்கச் செய்தல் வேண்டும். இந்தத் தலைமுறை மட்டுமின்றி அடுத்த தலைமுறையினரும் நலம் வாழ விரும்பும் நெஞ்சம் கொண்டவர் கவிஞர் அறிவுமதி. மனித குலம் காக்க மனித நேயம் கொண்டு மனிதனாய் வாழ்வோமாக! அன்பு ஒன்றே அகிலத்தை ஆளக்கூடும் என்பதை அறிவுமதி அவர்கள் தனது கவிதைகளின் வழி நிரூபித்துள்ளார்.

**மேற்கோள் நூல்கள்:**

1. Sellaperumal, M. (2001). *Kaviñar Ar̲ivumatiyin̲ Naṭpuk Kālam,* Tesis M.Phil. India: University Chennai.
2. Jorgen Dines Johansen. (2010). Integrative Psychological and Behavioral Science. *Volume 44, Number 3, Page 185*. Retrieved from: http://www.poetryfohttp://study.com/academy/lesson/how-to-analyze-emotion-in poetry.htmlundation.org/poetrymagazine/article/250626
3. Santhiya, S. (2014). *Arivumathi kavithaigal-Panmuga Paarvai*. Namakkal: Kavinyar Ramalinga Arasu Magalir Kalluri, Namakkal.
4. Jeyasree, R. (2010). *Ulaviyal Nokkil Meyppatthiyal-Oor Aaivu*. Tesis Doctor. India: University Bharathithasan.
5. Ilakkuvanar, C. (2009). *Tholkkappiyam*. Chennai: Royal Acchagam.
6. Singaravelu Sachithanantham, Dr. (2013). *Thirukkural*. Kuala Lumpur: Uma Publications.
7. Puliyur Kesikan. (2010). *Tholkappiam*. Chennai: Shri Senbaga Pathipagam.
8. Kavi. (2013). *Thiruvalluvar Seitha Thirukkural-Pulavar Kuzhanthai Urai*. Chennai: Segar Printers.

9. Aṟivumathi. (2011). *Mazhaippecchu*, Thiyagarayar Nagar. Chennai: Saral Pathippakam.
10. Aṟivumathi. (1978). *Anbana Ratchasikku.* Kovai: Thamizhlosai Pathippakam.